முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 20 /2022

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் நாள் வா.த.சா 1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திரு.எஸ்.ஜவகர், B.L., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நித்யகல்யாணி | வயது | : | 38 |
| தந்தை/கணவர் பெயர் | : | சிவராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதிகள்தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

என்னை பொதுவாக நித்யா என்றுதான் கூப்பிடுவார்கள். வாதசாஆ.3, 12.07.2013 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது. தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சுப்பம்மாள் பேரன் சிவராமன் ஏற்றுக்கொள்ள விரும்பாததால் நான் தற்சமயம் திருவாரூர் மாவட்டம் காட்டுர் கிராமத்தில் உள்ள பாரதி முதியோர் இல்லத்தில் இருந்து வருகிறேன் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்த பிறகு என்னுடைய பேரன் சிவராமனும் அவருடைய மனைவி நித்யாவும் என்னை காட்டுர் பாரதி முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு எனக்கு எந்தவித உபகாரமும் செய்யாமல் எனக்கு அன்ன

ஆகாரம், சத்திரம், வயோதிக காலத்தில் உபசாரம் செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். நான் எந்த நோக்கத்திற்காக அவர்கள் மீது நம்பிக்கை வைத்து தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தேனோ அந்த நோக்கம் சரிவர ஈடேராததாலும் என்னுடைய ஜீவனாம்சத்திற்கும், மருத்துவம் போன்ற செலவிற்கு என்னிடம் வேறு எந்தவித பொருளாதார வசதி இல்லாததாலும் நான் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் என் கைவசம் உள்ளதாலும், என்னுடைய ஜீவனத்திற்கு மேற்கண்ட செலவிற்கு தேவைப்படுவதால் நான் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரதை இந்த ரத்து பத்திரம் மூலம் ரத்து செய்துவிடுகிறேன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பம்மாள் 06.11.2013 ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் 16.02.2012 ல் என் கணவருக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ரத்து செய்ததாக கண்டுள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. இந்த அறிவிப்பு சுப்பம்மாள் என்மீது போட்ட கடலூர் முன்சீப் கோர்ட் வழக்கு எண்.OS.122/2014 ல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுகிற Acknowledgement கார்டில் உள்ள ஜெராக்ஸ் நகலில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அது பிதசாஆ.2 ஆகும். 06.11.2013 ல் சுப்பம்மாள் அனுப்பிய வக்கீல் நோட்டிஸ் பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையின் ஜெராக்ஸ்தான் என்றால் அது ஞாபகமில்லை. அப்போதே என் கணவர் பெயரில் எழுதி வைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டது பற்றி எனக்கும், என் கணவருக்கும், மாமனாருக்கும் நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு

சொத்துக்கு பக்கத்தில் என் மாமனாருக்கு சின்ன சொத்து சொந்தமாக உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை என் மாமனார் என் கணவர் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார். அதில் ஒரு வீடு கட்டியுள்ளோம். அது 2019 ல் கட்டடப்பட்டது. நாங்கள் வீடு கட்டியுள்ள இடமும், வழக்கு சொத்தும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. தானசெட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டது தெரிந்து கொண்டுதான் வழக்கு சொத்தில் நாங்கள் வீடு கட்டவில்லை என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டது எங்களுக்கு தெரியும் என்றாலும், சுப்பம்மாள் இறந்தபிறகு தேவையில்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை